| | | |
|---|---|---|
| சாட்சி : DW 2<br>திரு.பிச்சைஅமுதன்<br>த/பெ.திரு.வேலு | அ.வ.எண். 192/2017 | 29.07.2026 |

வாதி தரப்பில் குறுக்கு விசாரணை

1) நான் என்ன செய்கிறேன் என்றால் கூட்டுறவு சங்கத்தில் பணி செய்து ஓய்வு பெற்றுவிட்டேன். எனது பிறந்த தேதி என்ன என்றால் 25.12.1960. வேலுவிற்கு நான் என்ன உறவு என்றால் நான் அவரது மகன். நான் வேலுவின் மகன் என்பதற்கு ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. எந்த ஆவணத்தில் மேற்படி வேலுவின் கையொப்பம் செய்துள்ளதாக சொல்கிறேன் என்றால் கிரைய ஆவணம் என்று சொன்னார்கள், அதில் உள்ள கையொப்பம் எனது தகப்பனாருடையது.

2) பி.சா.ஆ.2 ஆவணத்தை நீதிமன்றத்தில் தான் முதல் முறையாக பார்க்கிறேன் என்றால் சரிதான். பி.சா.ஆ.2 ஏற்படுத்தப்பட்ட போது நான் சார்பதிவக அலுவலகத்திற்கு செல்லவில்லை என்றால் சரிதான். எனவே, பி.சா.ஆ.2 ஆவணத்தை பொறுத்து சார்பதிவக அலுவலகத்திற்கு யார் வந்திருந்தனர் என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். நெய்குளத்தில் எனக்கு சொத்து உள்ளது என்பதற்கு ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை.

3) பி.சா.ஆ.2 கிரைய ஆவணத்தில் உள்ள பி.சா.ஆ.11 கையொப்பம் வேலு என்பவரது சாட்சி கையொப்பம் என்பதை காட்ட என்னிடம் ஆவணம் உள்ளதா என்றால் உள்ளது. பி.சா.ஆ.2 கிரைய ஆவணத்தில் சாட்சி கையொப்பம் செய்துள்ள வேலு என்பவருக்கும்,

எனக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றாலும், நெய்குளம் கிராமத்திற்கும், எனக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றாலும், இவ்வழக்கில் பிரதிவாதிகளுக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

ஒப்பம்/– ப. கோபாலஅரசி,

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி.
இலால்குடி.

/உண்மை நகல்/

P GOPALA ARASI

Digitally signed by P GOPALA ARASI

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
இலால்குடி.